மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஓய்வு பெற்றதற்குப் பிறகு பல ஆண்டுகளாக ஓய்வூதியத்தைப் பெறாத நிலைமை முன்பு இருந்து வந்தது. நாங்கள் கடந்த மூன்று ஆண்டுக் காலத்திலே எடுத்த சில நடவடிக்கைகளின் காரணமாக இது குறைந்திருக்கிறது. மேலும் இப்போதும் சிறு சிறு முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். ஓய்வுபெற்ற மறுநாளே அவர்களுக்குச் சம்பளம் போல் ஓய்வூதியத்தை வழங்க வேண்டும் என்பதுதான் நம்முடைய நோக்கம். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மீண்டும் பரிசீலித்து எடுப்போம்.

*Officials of Jails under suspension.*

* 158. *Q.*—THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state—

(*a*) the number of Superintendents of Jail, Jailors, Head Wardens, etc., of the Jail Department who are under suspension, pending departmental enquiry ; and

(*b*) the period they have been under suspension ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) 1—1—1981-ன் நிலவரப்படி—

| | |
|---|---|
| 1. சிறைக் கண்காணிப்பாளர்கள் | 1 |
| 2. சிறை அலுவலர்கள் | 2 |
| 3. உதவி சிறை அலுவலர்கள் | 2 |
| 4. முதன்மைத் தலைமைக் காவலர் | 1 |
| 5. முதல் நிலைக் காவலர்கள் | 2 |
| 6. இரண்டாம் நிலைக் காவலர்கள் | 71 |
| 7. நன்னடத்தை அலுவலர்கள் | 2 |
| 8. உதவியாளர் | 1 |
| 9. இளநிலை உதவியாளர் | 1 |
| 10. சமையல் ஆள் | 1 |
| மொத்தம் . . | 84 |

1981 மார்ச் 24]

(இ) 27 அலுவலர்கள் 6 மாதங்களுக்கு மேலாகத் தற்காலிகப் பதவி நீக்கத்தில் உள்ளனர். 58 அலுவலர்கள் 6 மாதங்களுக்கு உள்ளாக தற்காலிகப் பதவி நீக்கத்தில் உள்ளனர்.

(முற்பகல் 9-50)

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** இதுபற்றி நீதிபதி இஸ்மாயில் அறிக்கை தரப்பட்டிருக்கிறது. இந்த மத்திய சிறை அதிகாரிகள் சுமார் இரண்டு, மூன்று வருடங்களாக சஸ்பென்ஷனில் இருக்கிறார்கள். இவ்வளவு காலம் விசாரணை நடக்கக் காரணம் என்ன ? அது எப்போது முடியும் ? சாதாரணமாக ஆறு மாதத்திற்கு மேல் அதிகாரிகளை சஸ்பென்ஷனில் வைக்கக்கூடாது என்று அரசாங்க உத்தரவு இருக்கிறது. அப்படி இருக்கும்போது, ஏன் அவர்கள் அப்படி சஸ்பென்ஷனில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** திரு. வித்தியாசாகர் அவர்கள் உயர் நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். அரசாணை எண் 211, தேதி 27—2—1980-ன்படி ஆறு மாதத்திற்கு மேல் காரணம் இல்லாமல் ஒரு அரசு அலுவலர் பணி நீக்கத்தில் இருக்கக்கூடாது என்று ரிட் மனு உயர்நீதி மன்றத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்த ரிட் மனுவின் அடிப்படையில் அவர்கள் பரிசிலித்து மாநில அரசு அவரை ஏன் பணியில் மீண்டும் அமர்த்தக்கூடாது என்று கேட்டார்கள். அரசு இது குறித்து பரிசிலித்து உத்தரவிட்டது. அந்த அடிப்படையிலே பரிசிலிக்கப்பட்டிருக்கிறது. இது குறித்து ஜெயில் போர்டு விசாரித்து, போர்ட் மெம்பர், விசாரணை அதிகாரிகள் எல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்போது விசாரணைக்குக் குந்தகமாக இருக்கும் நிலை இருந்தது. இப்போது விசாரணையினுடைய பெரும்பகுதி முடிந்துவிட்ட காரணத்தினால், அவர் பணியில் இருப்பது விசாரணைக்குக் குந்தகமாக இருக்காது என்ற அளவில் அவரை மீண்டும் பணியில் அமர்த்தலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் அவர் ஏற்கெனவே பணியில் அமர்த்தப்பட்டுவிட்டார்.

**திரு. சோ. ஆறுமுகம் :** சேலம் மாவட்டத்தில் சிறைக் காவலர்கள் எவ்வளவு பேர்கள் தற்காலிக வேலை நீக்கத்திலே இருக்கிறார்கள் ? 5—9—1980-ல் மாண்புமிகு அமைச்சர் அவர்களும், உயர்தர அதிகாரிகளும் அப்படி வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பவர்கள் குறித்து ஒரு நல்ல முடிவுக்கு வருவதாக வாக்களித்திருந்தார்கள். அரசாங்கத் தரப்பிலிருந்து ஒரு நல்ல முடிவுக்கு வருவதாகத் தகவல் கொடுத்தாலும், உயர் அதிகாரிகள் சிலர்

அதற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள். இதைப்பற்றி விரைவான நடவடிக்கை எடுக்கப்படுமா ? சிறைக்காவலர்களுக்கு என்று ஒரு நல்ல உத்தரவு வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, சேலம் மத்திய சிறைச்சாலையைப் பொறுத்த வரைக்கும் ஒன்பது, இரண்டாம் நிலைக் காவலர்கள் தங்களுடைய கல்விச் சான்றிதழை போலி கல்விச் சான்றிதழாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையிலே அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த வழக்கு தற்போது ஆய்வில் இருக்கிறது. மற்றபடி ஒழுங்கு நடவடிக்கைக்காக என்று ஓரிருவர் பதவி நீக்கத்தில் இருக்கிறார்கள். அதைப்பற்றி அரசு ஆராய்ந்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : ஆறு மாத காலத்திற்குமேல் சஸ்பென்ஷனில் சர்க்கார் ஊழியர்கள், அதிகாரிகள் இருந்தால், அவர்களுக்குச் சம்பளம், பஞ்சப் படி எல்லாம் 75 சதவிகிதம் தரவேண்டும் என்ற நியதி இருக்கிறது. அது அமுல் நடத்தப்படுகிறதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, விதிப்படி அது அமுல் நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, the Hon. Minister mentioned that the Superintendent of the Madras Jail who was suspended has been reinstated on a High Court Order which the Government has accepted. In that case, may I know whether the charges framed against the said Jail Superintendent have been dropped or whether the enquiry is still going on and whether it will be completed before the gentleman retires from service ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஒரு அரசு அலுவலர் குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கான விசாரணை நடக்கின்றபோது, அந்த விசாரணைக்குப் பங்கம் ஏற்படாமல் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான், தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்படுகிறார். விசாரணை அதிகாரிகள் அவரை மீண்டும் பணியில் அமர்த்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். விசாரணை பூர்வாங்கமாக முடிவடைந்திருக்கிறது. அந்த நிலையில் பணியில் அமர்த்திக்கொள்வது என்பது எந்த விதத்திலும் விசாரணைக்குப் பங்கமாக இருக்காது என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், ஆறு மாதத்திற்கு மேல் ஒரு அதிகாரியை தொடர்ந்து பணிநீக்கத்தில் வைத்திருக்கக்கூடாது என்ற நிலை இருக்கிறது. கிட்டத்தட்ட 2½ ஆண்டுகள் அவரைப் பணி நீக்கத்தில்

வைத்திருந்தார்கள். அதன்பேரில் அவர் கொடுத்த மனுவின் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்பேரில் அவர் மீண்டும் பணியில் அமர்த்தப் பட்டிருக்கிறார். பூர்வாங்கமான விசாரணை முடிந்துவிட்டிருக்கிறது. விசாரணையின் முடிவின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்தச் சிறை அதிகாரிகளிலே எத்தனை பேர்கள் சிறைக்குள்ளே தண்டனை அனுபவித்துக்கொண்டிருந்த கைதிகளிடம் தவறாக நடந்து, "inhuman treatment" என்ற அளவில் கொடுமைப்படுத்தி யிருக்கிறார்கள்? அந்த அடிப்படையிலே தற்காலிக வேலை நீக்கம் செய்யப் பட்டவர்கள், மீண்டும் அதே சிறை அதிகாரிகளாக வந்தால், மேலும் கொடுமைகளை அதிகமாகச் செய்யாமல், அதைத் தடுப்பதற்கு அரசு முறையான, சீரான நடவடிக்கைகளை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பல மாதங்களாகப் பலதரப்பட்ட அலுவலர்கள் பணியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டிருக்கிறார்கள். கைதி களிடம் கடுமையாக நடந்ததற்காக ஒரு நான்கு பேர் நீக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றும் அந்த அலுவலர்கள் பலர் திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்ட காரணத்தினாலே நீக்கப்பட்டிருக்கிறார்கள். சிலர் சிறைக்குள்ளே எடுத்துச் செல்லக்கூடாத பொருள்களை எடுத்துச் சென்றார்கள் என்ற காரணத்திற் காகவும், சிலர் சிறைக்கு வெளியே செல்கின்ற பெண்களிடம் தவறாக நடந்தார்கள் என்ற காரணத்திற்காகவும் பணிநீக்கம் செய்யப்பட்டிருக் கிறார்கள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தற்காலிக பணிநீக்கம் ஆறு மாதம் என்று இருப்பதை மூன்று மாதம் என்று குறைக்கும் நடவடிக்கையை விரைவு படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா? ஆறு மாத காலம் கடந்தும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கும்போது, அவர்களுக்கு ஊதியத்தைத் தரும் எண்ணம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, ஆறு மாத காலமே விசாரணைக்குப் போதவில்லை என்று விசாரணை அதிகாரிகள் சொல்வதால், அதைவிட காலத்தைக் குறைக்கக்கூடிய நிலை இல்லை. பணி நீக்க காலத்திற்கு அவர்களுக்கு சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் என்று கொடுக்கப் படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** சிறை அதிகாரிகள் மீது ஒரு குறிப்பிட்ட குற்றச் சாட்டின்மீது விசாரணை நடக்கின்றபோது, அவர்களுக்குத் தற்காலிக பணி நீக்கம் ஏற்பட்டு, விசாரணை நடத்தப்படுகிறது. அரசு அலுவலர்களுக்கு

விசாரணைக் காலம் முடிந்து திரும்பவும் அதே இடத்தில் வேலை கொடுத்தால், அதே குற்றத்தை அவர்கள் செய்ய வாய்ப்பு இருக்கும். அந்த அளவில் சிறை அதிகாரிகளுக்குக் கைதிகள் பொறுப்பு இல்லாமல், அரசின் வேறு இலாகாவில், வேறு பொறுப்பிலே அவர்களை அமர்த்துவது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அந்த அதிகாரிகள் கிட்டத்தட்ட சிறைகளிலேதான் பணி ஆற்றுபவர்கள். மேல் அதிகாரிகளுக்கு அந்தப் பணி தான் அதிகமாக இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட சிறையிலேதான் அந்தத் தவறுகள் நடந்திருக்கின்றன. இப்போது வேறு சிறிய சிறையிலேதான் அவர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். பொறுப்பு குறைவாக இருக்கின்ற இடத்திலே, அந்த அடிப்படையிலேதான் மாற்றிப் போடப்படுகிறார்கள். அந்த அளவில் இந்தமாதிரியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

THIRU A. R. DAMODARAN : Sir, the Government Order stipulating that the enquiry must be completed within six months may result in some enquiries being delayed so that the man may be reinstated in service. There are certain implications like that. May I request the Government to consider whether these enquiries could be made under some Special Court procedure or whether the Government could have some Government officers specially to conduct all these enquiries, because an element of doubt is likely to creep in? Is there any other Law Agency which could conduct these enquiries from the point of view of the Government ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அதற்கு என்று தனியாக ‘ லா ஏஜென்சி ’ ஒன்று அமைப்பதன் மூலமாக அந்த விசாரணையில் ஏற்படும் கால தாமதத்தைக் குறைக்க முடியும் என்று அரசு கருதவில்லை. இதுபோன்ற விசாரணைகளை போர்டு மெம்பர் போன்ற உயர்தர அதிகாரிகள் நடத்துகின்றார்கள். இதிலே கால தாமதத்திற்குக் காரணம் ‘ என்குயரி ஆபீசர்கள் ’ என்று சொல்ல முடியாது. ஆகவே இதற்காக என்று தனியாக ஒரு ‘ லா ஏஜென்சி ’ தேவையில்லை என்று கருதுகிறேன்.

**சிறையில் இறந்த கைதிகள்.**

* 159. வினா—**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

**(அ) 15—7—1977 முதல் 14—7—1980 வரை, சிறையில் இருக்கும் போது இறந்த கைதிகள் எத்தனை பேர் ;**